Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 240

திங்கட்கிழமை 24 ஜூலை 2023

ஆடி 08 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# கறுப்பு ஜூலை நினைவு நாளில் கொழும்பில் மீண்டும் வெறியாட்டம்

- நினைவுச்சுடர்களைச் சப்பாத்துக்கால்களால் மிதித்த பொலிஸார்
- நினைவேந்தல்களைக் குழப்பிய சிங்களக் கடும்போக்காளர்கள்
- பொலிஸார் – இராணுவம் ஏற்பாட்டாளர்கள் மீது தாக்குதல்
- நினைவேந்தல் பேரணி மீது பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம்

**கொழும்பு, ஜூலை 24**

**கறுப்பு ஜூலை இனப்படுகொலை 40ஆவது ஆண்டு நினைவு நாளை படுகொலை அரங்கேறிய தலைநகர் கொழும்பில் நேற்றுமாலை கடைப்பிடிக்க முற்பட்டபோது சிங்களக் கடும்போக்காளர்கள் இராணுவம், பொலிஸார், விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து குழப்பியடித்து தங்கள் வெறியாட்டத்தை மீண்டும் ஆடியுள்ளனர்.** »11



## கறுப்பு ஜூலை இனப்படுகொலை; தாயகமெங்கும் நினைவேந்தல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 24
கறுப்பு ஜூலை இனப்படுகொலையின் 40ஆவது ஆண்டு நினைவேந்தல்கள் »11

## கறுப்பு ஜூலை இனப்படுகொலை: நீதியை வழங்குவது சவாலானது

நீதியமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 24
நாட்டில் மீண்டுமொரு கறுப்பு ஜூலை சம்பவம் தோற்றம் பெறாத கட்டமைப்பை உருவாக்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். »11

## கறுப்பு ஜூலையில் கொல்லப்பட்டவர்கள் தமிழர்கள் அல்ல: விடுதலைப் புலிகளே!

கொழும்பில் கொந்தளித்த சிங்கள ராவயவினர்

கொழும்பு, ஜூலை 24
கறுப்பு ஜூலை கலவரத்தில் கொழும்பில் கொல்லப்பட்டது தமிழ் மக்கள் அல்ல. அனைவரும் விடுதலைப் புலிகளே. அவர்களை இங்கே நினைவுகூர அனுமதிக்க »11

குருந்தூர்மலை விகாரையில்

## பிக்குவுடன் இணைந்து சிவசேனையினர் வழிபாடு

முல்லைத்தீவு, ஜூலை 24
இலங்கையின் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் மற்றும் சிவசேனை உறுப்பினர்கள் தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களை உள்ளடக்கி அபகரிக்கப் »09

பணிப்பெண்ணாக இருந்த

## சிறுமி சடலமாக நேற்று மீட்பு!

உயிரிழப்பில் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 24
கல்வியங்காட்டில் வீட்டில் பணிபுரிந்த சிறுமியொருவர் சடலமாக நேற்று மீட்கப்பட்டுள்ளார். »09

வீடு புகுந்து

## வாள்வெட்டு, தீவைப்பு; குடும்பப்பெண் சாவு!

10 பேர் காயங்களுடன் மருத்துவமனையில்
வவுனியாவில் நேற்று அதிகாலை பயங்கரம்



வவுனியா, ஜூலை 24
வவுனியாவில் - தோணிக்கல் பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் நேற்று அதிகாலை 12.15 மணியளவில் வன்முறைக் கும்பலொன்று நுழைந்து வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியதுடன், வீட்டுக்குத் தீயிட்டுள்ளது. இந்தக் கோரச் சம்பவத்தில் 21 வயதான இளம் குடும்பப் பெண் உயிரிழந்துள்ள »09

## தமிழர்களின் தேவை நிம்மதி மட்டும்தான்

சமஷ்டியும், தனிநாடும் அவர்களின் கோரிக்கையல்ல என்கிறார் பிரதமர்

கொழும்பு, ஜூலை 24
தமிழ் மக்கள் நிம்மதியுடன்தான் வாழ விரும்புகின்றார்கள். அவர்கள் ஒற்றையாட்சி வேண்டும் என்றோ சமஷ்டி வேண்டும் என்றோ புலிகள் கோரிய »09

## இந்தியா - இலங்கை நிலத்தொடர்பு தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!!

சிங்கள கடும்போக்காளர்களிடமிருந்து கிளம்புகின்றது எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 24
இந்தியா, இலங்கையில் காலூன்ற நாடாளுமன்றத்தில் பிரதிநிதிகளாக இருக்கும் எவரும் கை உயர்த்தக்கூடாது. அது நாட்டின் பாதுகாப்புக்கு மிகப் பெரிய »09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சர்ச்சை மருந்துகளில் பக்ரீறியாக் கழிவுகள்!

## பரிசோதனையில் உறுதி

கொழும்பு, ஜூலை 24

**தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் இரசாயன ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் சர்ச்சைக்குரிய மருந்துகளில் பக்ரீறியாக் கழிவுகள் காணப்படுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**

தொழில் வல்லுநர்களின் தொழிற் சங்கக் கூட்டமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் இரசாயன ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் மூலம் சர்ச்சைக் குரிய மருந்துகளில் பக்ரீறியாக் கழிவுகள் காணப்படுவது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

இந்த மருந்துகளைப் பாவனையில் அப்புறப்படுத்துவதற்கு 3 மாதங்கள் கடந்துள்ளன. நோயாளிகள் மரணம் அடைந்து அது தொடர்பிலான அறிக் கைகளை வெளியிட 2 மாதங்கள் எடுத்துள்ளன. இந்த இடைப்பட்ட காலப்பகுதியில் நாடளாவிய ரீதியி லுள்ள மருத்துவமனைகளில் சர்ச் சைக்குரிய இந்த மருந்துகள் பயன் படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பரிசோதனைகளை மருத்து வமனைகளுக்கு மருந்துகளை விநி யோகிப்பதற்கு முன்னதாக மேற் கொண்டிருந்தால் நெருக்கடி நிலை தோற்றம் பெற்றிருக்காது- முறைப் பாடுகள் கிடைக்கப்பெற்றிருக்காது- மரணங்கள் பதிவாகியிருக்காது. குறித்த மருந்துகளைத் தற்காலிக மாகத் தடைசெய்யவும், விநியோகம் செய்யாமல் இருக்கவும் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

சுகாதார அமைச்சர் இந்தப் பிரச் சினை தொடர்பில் மக்கள் நலன் சார்பில் செயற்பட்டு இருக்க வேண்டும். சுகாதாரத்துறையுடன் சார்ந்த தரப்பினரைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டத்தை சுகாதார அமைச்சு முன்னெடுத்துள்ளது.

இந்த நெருக்கடிகள் தொடர்பில் ஜனாதிபதி நேரடியாகத் தலையிட்டு தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண் டும் - என்றார். (ச-இ)

# மருத்துவத்துறைக்கு அரசால் அழுத்தம்!

## சம்பிக்க எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு. ஜூலை 24

மருந்துகளின் தரத்தை நிர்ணயிக்கும் தேசிய மருந் துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு அரசாங் கத்தால் அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது. உயிர் களுடன் விளையாடும் இந்த விடயம் தொடர்பில் அரசு பதிலளிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சுகாதாரத்துறைக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக் கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:-

சுகாதாரத்துறை தற்போது பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.


உயிர்களுடன் விளையாடுகின்றார்கள். மருந்துக ளின் தரத்தை நிர்ணயிக்கும் மற்றும் தீர்மானிக்கும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை ளக்கு அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது.

பல பிரதான மருத்துவர்களை நீக்கிவிட்டு அந்த இடத்துக்கு தமக்கு நெருங்கியவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மருந்துகள் ஒழுங் குபடுத்தல் அதிகாரசபையிலுள்ள மருந்தாளர்கள் சிலர் நீக்கப்பட்டுள்ளனர்.

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்து நாட்டு மக்களின் உயிர்களுடன் விளையாடும் இந்த விட யம் தொடர்பில் உடனடியாக அரசாங்கம் பதில் வழங்க வேண்டும் - என்றார். (ச-இ)

# நுண்கடன் பொறியில் சிக்கித் தவிக்கும் மக்கள்

## மத்திய வங்கி நடவடிக்கையில்லை நீதியமைச்சர் சுட்டிக்காட்டு



கொழும்பு. ஜூலை 24

நுண்கடன் நிதித் திட்டம் தற்போது புற்றுநோய்போல் பரவியுள்ளது. இந்த நுண்கடன் நிதித் திட்டத்தால் கீழ்மட்ட - கிராமப்புற மக்கள் மிக மோசமாக பாதிக் கப்பட்டுள்ளனர் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரமிட் கொடுக்கல் வாங்கல் தற்போது இலங்கை யிலும் ஆதிக்கம் செலுத்தியுள்ளது. பிரமிட் கொடுக் கல், வாங்கல் முறைமை தொடர்பாக மத்திய வங்கி பல முறை அறிவுறுத்தல்களை விடுத்துள்ளது. ஆனால், அவற்றைக் கட்டுப்படுத்த உரிய நடவ டிக்கை இல்லை. நாடாளுமன்றத்தினூடாக அந்த முறைமைக்கெதிராக சட்டம் இயற்ற வேண்டும்.

அதேவேளை தற்போது நுண்கடன் நிதித் திட்டம் புற்றுநோய்போல் பரவி வருகின்றது. குறைந்த வருமானம் பெறுவோருக்கான நிதி சேவை வழங் கும் செயற்பாடாக நுண்கடனை மத்திய வங்கி அறிவித்தாலும் இதனால் மக்களுக்கு நன்மை கிடைத்துள்ளதா என்பது கேள்விக்குறியே? கிராம மக்கள் மாத்திரமின்றி நகர்ப்புறங்களில் வாழும் மக்களும் தற்போது நுண்கடன் பொறியில் சிக்கி யுள்ளனர்.

இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் மத்திய வங்கிக்கு உண்டு. ஆனாலும் எவ்வித நட வடிக்கையும் எடுக்கவில்லை - என்றார். (ச-இ)

# அஸ்பிரின் மருந்தும் தரமற்றதென உறுதி

## பாவனையில் நீக்க ஏற்பாடு




கொழும்பு, ஜூலை 24

அரசாங்க மருத்துவமனைகளி லிருந்து இரு வகையான அஸ்பிரின் மருந்துகள் பயன்பாட்டிலிருந்து நீக் கப்படவுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதி காரசபையின் பரிந்துரைகளுக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது. இது தொடர்பான சுற்ற றிக்கையை மருத்துவ வழங்கல் பிரிவு வெளியிட்டுள்ளது.

அரசாங்க மருத்துவமனைகளில் பயன்படுத்தப்படும் அஸ்பிரின்களின் பல மாதிரிகள் அண்மையில் தேசிய மருந்து ஒழுங்குமுறை அதிகார சபையால் பரிசோதனைக்குட்படுத் தப்பட்டன.

இதன்போதே குறித்த இரண்டு வகை மருந்துகள் தரமற்றவை எனக் கண் டறியப்பட்டுள்ளது. (ச-இ)

# கெஹலியவுக்கு எதிரான பிரேரணை சபாநாயகரிடம்

## சமர்ப்பித்தது எதிர்க்கட்சி

கொழும்பு, ஜூலை 24

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கை யில்லாப் பிரேரணையை எதிர்க்கட்சிகள் இணைந்து சபாநாயகரிடம் கையளித்துள்ளன. இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் 45 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

அண்மைய காலங்களில், தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்து அவற்றைப் பயன்படுத்தியதால், அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் நிகழ்ந்தன. மக்களின் நலன்கருதாது தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்தமைக்கு முழுக்காரணம் சுகாதார அமைச்சரே எனத் தெரிவித்து இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# சுகாதாரத்துறைத் தகவல்களை வெளியிட்டால் நடவடிக்கை!

## சுற்றறிக்கை அனுப்பிவைப்பு

சுகாதாரத்துறை தொடர்பான தக வல்களைத் திணைக்களப் பிரதா னியின் அனுமதியின்றி ஊடகங் களுக்கு வெளியிடும் அனைத்து சுகாதார அதிகாரிகளுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் படும் எனத் தெரிவித்து துறைசார் அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாள ரால் அனைத்து அரச சுகாதார அதிகாரிகளுக்கும் இந்தச் சுற்ற றிக்கை அனுப்பி வைக்கப்பட் டுள்ளது.

மாகாண சுகாதாரச் செயலாளர் கள், சுகாதார அமைச்சுக்கு சொந் தமான அனைத்து நிறுவனங் களின் பிரதானிகள், அனைத்து மாகாண சுகாதார சேவை பணிப் பாளர்கள், பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர்கள் மற்றும் அனைத்து அதிகாரிகளுக்கும் இது பொருந்தும் எனக் கூறப்பட்டுள் ளது. இதேவேளை - கருத்துச் சுதந் திரத்தைப் பறிக்கும் வகையில் சுகாதார அமைச்சால் வெளியிடப் பட்ட இந்தச் சுற்றறிக்கைக்கு எதி ரான கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தொழிற்சங்கங் கள் தெரிவித்துள்ளன. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழர் பூர்வீகத்தை மறைத்து பௌத்த முலாமிட இடமளியோம்

ரவிகரன் விடாப்பிடி

முல்லைத்தீவு, ஜூலை 24

**பரம்பரை பரம்பரையாக சைவத்தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த முல்லைத்தீவு குருந்தூர்மலையிலிருந்த தமிழர்களின் பூர்வீகத் தொல்லியல் வழிபாட்டு அடையாளங்கள் மீது பௌத்த முலாம் பூசி பௌத்த தொல்லியல் இடமாக்கும் திட்டமிட்ட - கட்டமைக்கப்பட்ட இனஅழிப்புச் செயற்பாட்டை ஒருபோதும் ஏற்க முடியாது. குருந்தூர்மலையும், தண்ணிமுறிப்புக் கிராமமும் தமிழ் மக்களுக்குரியவையே - இவ்வாறு வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், குருந்தூர்மலையை, பௌத்த தொல்பொருள் சின்னமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்திருப்பது மிகவும் வேடிக்கையானது.

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு பகுதியானது சைவத் தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த பூர்வீக கிராமமாகும்.

தண்ணிமுறிப்புக் கிராமத்தை தழுவி 'நிலக்கிளி' எனும் நாவல் இலக்கியம் ஒன்று எழுதப்பட்டுள்ளது. இங்கு வாழ்ந்த பூர்வீகத் தமிழ் மக்களின் வாழ்வியலை 'நிலக்கிளி' நாவல் தெளிவாகக் கூறுகின்றது.

அசாதாரண சூழ்நிலை காரணமாக 1984ஆம் ஆண்டு தண்ணிமுறிப்புப் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்தனர். பின்னர் மக்கள் பலதடவைகள் தம்மைத் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துமாறு கோரியும் இதுவரை மீள்குடியேற்றம் இடம்பெறவில்லை. பூர்வீகத் தமிழ் மக்களை மீள்குடியேற்றம் செய்யாமல் இன அழிப்புகளைச் செய்து வருகின்றனர்.

எமது தமிழர்களின் பூர்வீக வரலாற்று இடத்தை அத்துமீறி அபகரித்து வைத்துக்கொண்டு, தமிழர்களின் வரலாறுகளை மூடி மறைத்துவிட்டு அதற்கு மேல் பௌத்த வரலாறுகள் இங்கு புதிதாக எழுதப்படுகின்றன. தமிழர்கள் இந்த நாட்டில் ஏதிலிகளாக வந்தவர்கள் எனக் காட்டுவதற்கு சிங்களம் முயற்சிக்கின்றது.

நாட்டின் பூர்வீகக்குடிகளான எம்மால், சிங்களத்தின் இத்தகைய செயற்பாட்டை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

சரத் வீரசேகர மற்றும், ஜயந்த சமரவீர போன்ற சிங்கள இனவாதிகளாலேயே இனங்களுக்கிடையே இனமுறுகல் ஏற்படுகிறது. அரசியல் மனநோய் உள்ள இவர்களை அரசியலில் இருந்து ஓரங்கட்டவேண்டும். தவிர, இவ்வாறான இனவாதத்தையோ, பிரிவினையையோ, வன்முறையையோ ஒருபோதும் நாம் விரும்பவில்லை - என்றார். (ச-246)




## லிட்ரோ - லாப்ஸ் எரிவாயு விலைச்சூத்திரம் விரைவில்

கொழும்பு, ஜூலை 24

லாப்ஸ் மற்றும் லிட்ரோ எரிவாயுவின் விலைகளை சமமாக இருக்கும் வகையில் விலைச் சூத்திரம் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சந்தையில் லிட்ரோ எரிவாயுவின் விலையுடன் ஒப்பிடும்போது லாப்ஸ் எரிவாயுவின் விலை உயர்வாகவுள்ளது. இது குறித்து லாப்ஸ் எரிவாயு நிறுவனத்துடன் கலந்துரையாடியுள்ளோம்.

விலைத் திருத்தம் தொடர்பான ஒப்பந்தத்தை அடுத்த வாரமளவில் வழங்குவதாக அந்த நிறுவனம் உறுதியளித்துள்ளது என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

## அரச நிறுவன மறுசீரமைப்பு: பணிகள் விரைவில் நிறைவு

*நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்*

கொழும்பு, ஜூலை 24

அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது தொடர்பில் ஆராய நிதியமைச்சில் தனி அலகு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வெகுவிரைவில் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் மறுசீரமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நட்டமடையும் அரச நிறுவனங்களுக்கு திறைசேரியால் நிதி வழங்க முடியாது. அவற்றை மறுசீரமைப்பது தொடர்பில் கொள்கை ரீதியில் தீர்மானம் எடுக்கப்படும். குறுகிய அரசியல் நோக்கத்துக்காக மறுசீரமைப்புப் பணிகளை இடைநிறுத்தினால் நாடு மீண்டும் வங்குரோத்து நிலையடையும். நிலையான தீர்வை இலக்காகக் கொண்டு செயற்படுவது அத்தியாவசியமானதாக அமையும்- என்றார். (ச-இ)

## மற்றுமொரு தாய், சேய் மீரியபெத்தவில் மாயம்!

கொழும்பு, ஜூலை 24

மீரியபெத்த ஹேவாஹெட்டவில் தாயும் மகளும் மருத்துவமனைக்குச் சிகிச்சை பெறுவதற்குச் சென்ற நிலையில் கடந்த திங்கட்கிழமையிலிருந்து காணாமற்போயுள்ளனர் எனக் கணவரால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

22 வயதான தாயும் அவரது ஒரு வயதுக் குழந்தையுமே காணாமற்போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுகவீனமடைந்த நிலையில் சிகிச்சை பெறுவதற்காக கடந்த 17ஆம் திகதி மருத்துவமனைக்குத் தனது குழந்தையுடன் சென்ற அவர் இதுவரை வீடு திரும்பவில்லை என முறைப்பாட்டில் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அண்மையில் அங்குருவத்தோட்டவில் காணாமற்போன இளம் தாயொருவரும் அவரது [illegible] குழந்தையும் சடலங்களாகக் [illegible]டில் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)




ரெயின் வரும் முன்னே சாவு வரும் பின்னே எண்டுறது சரியாத்தான் இருக்கு. கொஞ்சநாள் தண்டவாளம் திருத்திற வேலையால ரெயின் ஓடாம இருக்கேக்க, ரெயின்ல அடிபட்டுச் சாகிற சங்கதி எல்லாம் ஓய்ஞ்சிருந்தது. இப்ப ரெயின் ஓடத் தொடங்கினவுடன பழையபடி, அதோட மோதுப்பட்டுச் சாகிற செய்திகள் வரத்துடங்கிட்டுது. மீசாலை ஐயா கடைக்குக் கிட்டவா உள்ள தண்டவாளத்தைக் கடக்க வெளிக்கிட்ட வயசான ஒருத்தர் ரெயினோட அடிபட்டுச் செத்துப்போட்டார். அந்த இடத்தில ஒரு ரெயில்கடவை இருக்கு. ஆனால் அதில ரெயின் வரேக்க ஒரு சிவப்பு லைட் எரிஞ்சு, 'கூ...கூ...கூ' எண்டு விட்டு விட்டு சத்தம் போடும். அதுதான் அந்தக் கடவையின்ர டியூட்டி. இப்பிடி அம்புலன்ஸ் மாதிரி வாற சத்தத்தைக் கேட்டுத்தான் ஆக்கள் ரெயின் வருகுதெண்டு தண்டவாளத்துக்கு அங்கால ரண்டு பக்கமும் ஒதுங்கி நிக்கோணும். மற்றபடி ஆக்கள் அந்தத் தண்டவாளத்துக்குப் போகாதபடி குறுக்க மறிக்கிற தடியோ, கம்பியோ இல்லை. அதால காதுப் பிரச்சினை உள்ளவை ரெயின் அந்தத் தண்டவாளத்தால போனால் சிக்கல்தான் . அதோட அந்தச் சந்தியில தண்டவாளம் வளைஞ்சு வாறதால , ரெயின் தூர வரேக்க தெரியாது. இப்பிடியான இடத்தில கட்டாயம் ஒழுங்கான பாதுகாப்புக்கடவை போடவேணும். ஆனால் அதுகள் ஒண்டையும் செய்யாமல் விட்டால் இப்பிடி சனம் அநியாயமா ரெயின்ல அடிபட்டுச் சாகிறது தொடரும் தானே.

தென்மராட்சியில இப்பிடி சரியான பாதுகாப்புக் கடவை இல்லாத இடங்கள் கனக்க இருக்குது. வவுனியாவில பாதுகாப்புக் கடவையைப் போடச் சொல்லி கனதரம் ஆர்ப்பாட்டமும் நடந்திருக்கு. ஆனாலும் இப்பிடியெல்லாம் ஆக்கள், ஆடுமாடுகள் அடிபட்டுச் செத்தபிறகும், ஆர்ப்பாட்டங்கள் நடந்த பிறகும் கூட அந்த இடங்களில பாதுகாப்புக் கடவை போடப்படேலை. மனிசரின்ர உயிருக்கு அவ்வளவு தான் மரியாதைபோல. இப்பிடி ஆபத்தான இடங்களில பாதுகாப்புக் கடவை போடச் சொல்லி சனங்கள் ஆர்ப்பாட்டம் பண்ணமுதலே அதைச் செய்து குடுக்க வேண்டியது அரசாங்கத்தின்ர கடமை. ஆனால் அரசாங்கம் அப்பிடிச் செய்து தாற மனநிலையில இல்லை. 'பொருளாதார நெருக்கடி, டொலர் இல்லை' இப்பிடி ஏதாவது காரணத்தைச் சொல்லித் தட்டிக்கழிக்கத்தான் பாப்பினம்.

அப்பிடியெண்டால் சனங்கள் சாக வேண்டியது தானோ? எண்டும் கேக்கலாம். உண்மையில பாதுகாப்புக் கடவை இல்லாததால தான் ஆக்கள் சாகினமெண்டாலும், கொஞ்சம் எச்சரிக்கையோட எல்லாரும் நடந்தால், உப்பிடி ரெயின்ல அடிபட்டுச் செத்தவையில முக்கால்வாசிப்பேர் உயிரோட இருந்திருப்பினம். கடவை இல்லாத இடங்களைக் கடக்க முதல் கொஞ்சம் வேகத்தைக் குறைச்சு, அங்காலையும் இஞ்சாலையும் ஒண்டுக்கு ரண்டு தரம் வடிவாப் பார்த்திட்டு கடந்தால் பிரச்சினை இல்லையே. அதைச் செய்யாமல் ரெயினைக் கவனிக்காமல் தண்டவாளத்தைக் கடக்கேக்க ஆரும் செத்தால், அதுக்கு அரசாங்கம் மட்டுமில்லை செத்தவையும் அரைவாசிப் பொறுப்புத்தான். எங்கட உயிரை நாங்கள் தான் கவனமாப் பாக்கோணும்: அதை மாதிரி ஆடு,மாடுகளையும் தண்டவாளப் பக்கம் மேயவிடுறதையும், இரவில தங்க வைக்கிறதையும் நிப்பாட்டினால் அதுகளையும் காப்பாத்த முடியும்.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். பிள்ளைகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும்.

**மிதுனம்:** மகிழ்ச்சியான நாள். மனதில் தைரியம் அதிகரிக்கும். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பிணக்குகள் நீங்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது நல்லது. காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மகிழ்ச்சி நிலவும். பிரச்சினைகள் நீங்கும். உதவி கிடைக்கும். மனவருத்தம் நீங்கும்.

**சிம்மம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. பிணக்குகள் நீங்கும். தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் தாமதமானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பெருமை உண்டாகும். எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைக்கும்.

**துலாம்:** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். உ. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தாயின் உடல் நலனில் கவனம் செலுத்தவும். புதிய முயற்சிகளில் நன்கு சிந்தித்து ஈடுபடவும்.

**தனுசு:** மகிழ்ச்சி தரும் நாள். கணவன் வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள்.

**மகரம்:** முக்கியமான முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம். செலவுகள் ஏற்படும். பிடிவாதப் போக்கு சற்று கவலை தரும். நன்மைகள் ஏற்படும்.

**கும்பம்:** நினைத்த காரியத்தை முடிப்பதில் சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படக்கூடும். உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வது ஆறுதல் தரும். தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். ஆதாயம் கிடைக்கும். பணவரவும் பொருள்சேர்க்கையும் ஏற்படும்.

# இடர்களைத் தடுப்பதற்கு தீயணைப்பு வசதி செய்க

## பச்சிலைப்பள்ளி மக்கள் கோரிக்கை

**கிளிநொச்சி, ஜுலை 24**

**தென்னைசார் உற்பத்தித் தொழிற்சாலைகள் அதிகளவில் உருவாக்கப்பட்டு இயங்கிவரும் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் தீயணைப்புப் படை அமைக்க வேண்டியது கட்டாயமாகும். இதற்குப் பிரதேசசபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்ததாவது:

பளை இத்தாவிலிலுள்ள தும்புத் தொழிற்சாலையில் நேற்றுமுன்தினம் இரவு திடீரென தீப்பற்றியதில் பல லட்சம் ரூபா பெறுமதியான உற்பத்திப் பொருள்கள், மின்சாதனங்கள் என்பன எரிந்துள்ளன.

தொழிற்சாலையில் தீ பரவியவேளை பொலிஸார் மற்றும் படையினர் அங்கு வருகை தந்திருந்தபோதிலும் தீயை அணைப்பதற்கு நீர் வசதி இல்லாதமையால் தீயைக் கட்டுக்குள் கொண்டுவரமுடியவில்லை.

கிளிநொச்சியிலிருந்து தீயணைப்பு வாகனம் வந்துசேர்வதற்கிடையில் பெருமளவு உற்பத்திப் பொருள்கள் எரிந்து சாம்பராகின. அத்துடன் தீ பரவியதில் அயற்காணியிலுள்ள பெருமளவு பனைமரங்களும் எரிந்துள்ளன. எனவே தொழிற்சாலை அமைக்க முன்னர் அதன் இடப்பரப்பு மற்றும் இடர் முகாமைத்துவம் என்பவை தொடர்பில் ஆராய வேண்டும்.

அத்துடன் இவ்வாறான இடர்களைத் தவிர்ப்பதற்கு பிரதேசத்துக்கு தீயணைப்பு வசதி ஏற்படுத்தப்பட வேண்டும்- என்றனர். (ச-9)

### நானாட்டான் மருத்துவமனைக்கு
## மன். நலன்புரி சங்கத்தால் அபிவிருத்தித் திட்டங்கள்!

மன்னார், ஜுலை 24



மன்னார் நலன்புரி சங்கத்தின் பிரித்தானியாக் கிளையின் சுமார் 26 லட்சம் ரூபா நிதியுதவியில் நானாட்டான் மருத்துவமனையில் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கான திட்டவரைவை மன்னார் நலன்புரி சங்கத்தின் பிரித்தானியாக் கிளையின் தலைவர் ஜேம்ஸ் பத்திநாதன் கடந்த வெள்ளிக்கிழமை மருத்துவமனைக்குச் சென்று பார்வையிட்டு நிர்வாகத்திடம் கையளித்தார்.

இதன்போது மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன், மருத்துவர்கள், அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-இ)



## வடக்கில் இன்று சீரான வானிலை

கொழும்பு, ஜுலை 24

வடமாகாணத்தில் இன்று சீரான வானிலை நிலவுமென்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதுதொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில், மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்கள் மற்றும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் சிறிதளவு மழை பெய்யக்கூடும். அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்- என்றுள்ளது. (ம)

## சொற்பொழிவு

கொடிகாமம், ஜுலை 24

யாழ்ப்பாணம் சரவணை தேவபுரம் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டுச் சிறப்புச் சொற்பொழிவு நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை வரை தினமும் மாலை 6 மணிக்கு ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் இந்தச் சொற்பொழிவு நடைபெறவுள்ளது. (ய-159)

## இரண்டாம் தவணை இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜுலை 24

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணையின் முதலாம் கட்டம் இன்று ஆரம்பமாகின்றது.

தவணை விடுமுறை தொடர்பில் வெளியான அறிவித்தல் புதுப்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் உள்ளதாவது:

இரண்டாம் தவணையின் முதலாம்கட்டம் இந்தமாதம் 24ஆம் திகதி ஆரம்பமாகி, ஓகஸ்ட் 17ஆம் திகதியுடன் நிறைவடையும். ஓகஸ்ட் 18ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்படும்.

இரண்டாம் தவணையின் இரண்டாம் கட்டம் ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி வரை நடைபெறும்.

மூன்றாம் தவணையின் முதலாம் கட்டம் ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 24ஆம் திகதி வரை இடம்பெறும். நவம்பர் 25ஆம் திகதி முதல் டிசெம்பர் 31 வரை விடுமுறை வழங்கப்படும். பின்னர் மூன்றாம் தவணையின் 2ஆம் கட்டம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி வரை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மஹோற்சவம்

கொடிகாமம், ஜுலை 24

சாவகச்சேரி மட்டுவில் மருதடி தான்தோன்றிப் பிள்ளையார் ஆலயத்தின் மஹோற்சவப் பெருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. (ய-159)

## கடிகாரம் பழுதடைவு திருத்தித் தாருங்கள்

கிளிநொச்சி, ஜுலை 24

ஆனையிறவு ரயில் நிலைய முன்றிலில் பழுதடைந்த கடிகாரத்தைத் திருத்தித்தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கடிகாரம் பயணிகள் மற்றும் ஏ-9 வீதியில் பயணிக்கும் மக்கள் நலன்கருதி ரயில் நிலையத் திறப்பு விழாவின்போது பொருத்தப்பட்டது. இது தற்போது பழுதடைந்துள்ளதால் கடிகாரத்தைத் திருத்தித் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ய-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# இருள் விலகாத ஜூலை இரவுகள்

**1983**ஆம் ஆண்டு ஜூலை மாதம் இதே நாள்களில் இலங்கைத் தீவு பற்றியெரிந்தது. தலைநகர் கொழும்பில், தமிழர்கள் வெட்டியும், கொத்தியும், தார் ஊற்றியும் தேடித்தேடிக் கொல்லப்பட்டார்கள். அவர்களின் வாழ்விடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துகள் நாசமாக்கப்பட்டன. காடையர்களின் பேரால் நிகழ்த்தப்பட்ட இந்தப் பேரழிவுகளுக்குப் பின்னால் நின்று இயக்கியது சிங்களப் பேரினவாத அரசே. காடையர்களுக்கான போக்குவரத்து, உணவு உள்ளிட்ட வசதிகள் என்பவற்றையெல்லாம் அரசும், அரச படைகளுமே வழங்கின. இந்த அட்டூழியங்களையெல்லாம், பொலிஸார் கைகட்டி வேடிக்கை பார்த்து மகிழ்ந்தனர். 40 வருடங்கள் கழிந்த பின்னும்கூட இன்னும் கறுப்பு ஜூலை நினைவுகள் நிழலாடியபடியேதான் இருக்கின்றன. அந்த இனப்படுகொலைக்கு எவரும் நீதி தரவுமில்லை. தமிழர்களை என்ன செய்தாலும், கேட்க எவரும் வரப்போவதில்லை என்ற துணிச்சலைக் கொடுத்தது 1983ஆம் ஆண்டு இனவழிப்புத்தான். அதன் நீட்சியே முள்ளிவாய்க்கால் வரை பின் தொடர்ந்தது. எனினும் 1983 இனப்படுகொலையின் தாக்கம்தான் தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை வீறுகொள்ளவும் வைத்தது.


1983ஆம் ஆண்டோடு உக்கிரமடைந்த உள்நாட்டுப் போரிலும் இலங்கைப் பேரினவாத அரசாங்கம், போராளிகளை விடவும் பொதுமக்களையே அதிகம் இலக்கு வைத்து, கொன்றொழித்தது. குறிப்பாக விமானக் குண்டு வீச்சு, எறிகணைத் தாக்குதல் என்பவற்றின் மூலம் கொத்துக் கொத்தாக அப்பாவி மக்களின் உயிர்களைக் காவுகொண்டது. மூன்று தசாப்தங்களாகத் தொடர்ந்தபோரில், ஒவ்வொரு மாதமுமே தமிழர்களுக்கு 'கறுப்பு ஜூலையாக' அழிவின் மாதமாகவே அமைய வேண்டுமென பேரினவாதம் எண்ணிக் கருமமாற்றியது. கொக்கட்டிச்சோலைப் படுகொலை, சத்துருக்கொண்டான் படுகொலை, வல்வைப் படுகொலை, நவாலித் தேவாலயப் படுகொலை, செஞ்சோலைப் படுகொலை, முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை என வரலாறெங்கும் அப்பாவி மக்களின் இரத்தவாடையை பேரினவாத அரசாங்கம் மேலெழ வைத்தது.

போர் முடிவுக்கு வந்த பின்னரும் கூட, தனது இனப்படுகொலையை வெவ்வேறு வடிவங்கள் ஊடாக சிங்களப் பேரின அரசு தொடரவே செய்கின்றது. குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலை என்று தமிழர் தாயகப் பகுதிகளில் புதிது புதிதாக பௌத்த விகாரைகள், சைவ ஆலயங்கள் மீதான தாக்குதல்கள், சிங்களக் குடியேற்றங்கள், தமிழ் மொழிப் புறக்கணிப்பு, தனிச் சிங்கள நியமனங்கள், காணி அபகரிப்பு, இராணுவ மயமாக்கல், காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், மனிதப்புதைகுழிகள் என்று எண்ணற்ற பிரச்சினைகள் பேரினவாதிகளால் வலிந்து உருவாக்கப்படுகின்றன. தமிழ் மக்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான விரிசலை நெருக்கமாக்குவதற்குப் பதிலாக இன்னும் பிளவுபடுத்தி அந்தப் பிரிவினையை தமது வாக்குவங்கியாக்கி தேர்தல்களில் வென்று ஆட்சியதிகாரத்தில் குளிர்காயவே சிங்கள – பௌத்த பேரினவாதத்தை உயிர்மூச்சாகக் கொண்ட சிலர் கங்கணம்கட்டி நிற்கின்றனர்.

வரலாறு ஒரு பேராசான். அது ஆகச்சிறந்த கற்பிதங்களை யதார்த்தமாக உணர்த்தும். அதை ஆராய்ந்து நமது இழிநிலைக்கு என்ன காரணமோ அதைத் தீர்த்து, சகோதர மனப்பான்மையையும் இனப்பன்மைத்துவத்தையும் கட்டியெழுப்புவதுதான் ஓர் அரசின் பணியாக இருக்க முடியும். ஆனால், என்ன காரணத்துக்காக கறுப்பு ஜூலை இடம்பெற்றதோ, அதை இம்மியும் தளர்ந்து போக விடாது மேலும் மேலும் ஊதிப்பெருப்பிப்பதைத்தான் சிங்களப் பேரினவாத சிறிலங்கா அரசு செய்து கொண்டிருக்கின்றது. அந்த வரலாற்றுத் தவறின் விளைவுகள், இலங்கையை இன்னும் பல தசாப்தங்களுக்கு அரசியல், பொருளாதாரம், கலை, கலாசாரம் என்று பல வழிகளிலும் நின்று கொல்லவே செய்யும்.

## நாளொரு நல்வார்த்தை

ஆகாயத்தில் பறக்கும் பறவைகளின் வழியைக்கூட அறிந்து விடலாம். ஆனால் அதிகாரிகளின் எண்ணப் போக்கை அறிய முடியாது. –சாணக்கியர்–






# செப்ரெம்பரில் மீண்டும் பொருளாதார நெருக்கடி

**வயம்ப பல்கலைக்கழகத்தின் கணக்கியல் துறைத்தலைவர் கணிப்பு**

**கொழும்பு, ஜூலை 24**

**இந்த வருடத்தின் செப்ரெம்பர் மாதம் இலங்கை மீண்டும் ஒரு பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்படும் அபாயம் காணப்படுகின்றது என்று வயம்ப பல்கலைக்கழகத்தின் கணக்கியல்துறைத் தலைவர் பேராசிரியர் அமிந்த மெத்சிலா பெரேரா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட நிபந்தனைகள் மற்றும் ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.
இதனால் நெருக்கடியின் இரண்டாம் கட்டம் ஏற்பட வாய்ப்புள்ளது. இலங்கையின் பொருளாதார மீட்சி தொடர்பான ஒப்பந்தங்களில் குறைந்தது 39 வீதமானவற்றை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். இந்த நிலையில் இதுவரை 10 வீதமான நிபந்தனைகள் மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ளன - என்றார். (ம)

# வாகன இறக்குமதி வருவாயை விட டொலர் இருப்பால் நன்மை அதிகம்

**நிதி இராஜாங்க அமைச்சர் வெளிப்படை**

வாகனங்களை இறக்குமதி செய்வதால், அரசாங்கத்துக்குக் கிடைக்கும் வருமானத்தை விடவும், அவற்றை இறக்குமதி செய்யாமல் டொலரின் இருப்பைச் சேமிப்பதால் நன்மை அதிகம் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வாகனங்கள் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டதன் காரணமாக 620 பில்லியன் ரூபா வரி வருமானம் இல்லாமல் போனது. ஆனால் இறக்குமதியால் கிடைக்கும் வரி வருமானத்தை விட, அந்த இறக்குமதிக்காகச் செலவிடும் டொலரைத் தவிர்க்க வேண்டியது அவசியமாகவுள்ளது. எதிர்காலத்தில் வாகன இறக்குமதி தளர்த்தப்பட்டால், மோட்டார் சைக்கிள்கள், பொதுப் போக்குவரத்து வாகனங்கள் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும் - என்றார். (ம)

# நெருக்கடியிலிருந்து மீட்சி; சிறந்ததொரு முன்னேற்றம்

**இலங்கைக்கு சீனா பாராட்டு**

கொழும்பு, ஜூலை 24
நாட்டின் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கும் முயற்சிகளில் அரசாங்கம் முன்னேற்றம் கண்டுள்ளமை பாராட்டுக்குரியது என்று இலங்கைக்கான சீனத்தூதுவர் தெரிவித்துள்ளார்.
இலங்கைக்கான சீனத்தூதுவர் ஷென் ஹோங் மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோருக்கிடையில் அண்மையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.
இதன்போது பொருளாதாரப் பிரச்சினைக்கு குறுகிய காலத் தீர்வுகள் மற்றும் நீண்டகாலத் தீர்வுகள் சமனாக இருக்க வேண்டும் எனச் சுட்டிக்காட்டிய பிரதமர், நீண்டகாலத் தீர்வுகளாக நேரடி தனியார் முதலீடுகள் மற்றும் விவசாயம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, நீர்ப்பாசனம், நீர்வழங்கல் துறை என்பனவற்றில் முதலீடுகளை இலங்கை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.
அத்துடன் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்த இலங்கைக்கு சீனா வழங்கிய தொடர்ச்சியான ஆதரவுக்கும் பிரதமர் நன்றி தெரிவித்தார். (ச-இ)


**நாளை** 25.07.2023 செவ்வாய்க்கிழமை ஆடி 09

சுபநேரம் : 10.32 - 12.02
ராகுகாலம் : 03.02 - 04.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ். பல்கலையில் கறுப்பு ஜூலை நினைவேந்தல்



யாழ்ப்பாணம், ஜூலை 24
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கறுப்பு ஜூலை நினைவு தினம் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலின் அருகே அமைந்துள்ள பல்கலைக் கழகத்தின் பிரதான கொடிக் கம்பத்தில் மாணவர்களால் கறுப்புக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

தொடர்ந்து பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் கறுப்பு ஜூலை நினைவுப் படத்துக்கு மாணவர்களால் ஈகைச்சுடரேற்றப்பட்டு மலரஞ்சலியுடன் அகவணக்கம் செலுத்தப்பட்டது. அத்துடன் 1983 கறுப்பு ஜூலை வாரத்தில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பான நினைவுரையும் பகிரப்பட்டது. நினைவேந்தலில் பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர்கள் எனப் பலர் பங்கேற்று அஞ்சலித்தனர். (ச-125)



## கறுப்பு ஜூலை படுகொலை

# உயிர் தப்பியோரை சந்தித்தார் ட்ரூடோ

**ஒட்டாவா, ஜூலை 24**
**கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இலங்கையில் கறுப்பு ஜூலை படுகொலையில் பாதிக்கப்பட்டு உயிர்பிழைத்தவர்களைச் சந்தித்துள்ளார். இதனை அவர் தனது ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளார்.**

"மனதை நெகிழவைக்கும் காலை. கறுப்பு ஜூலையின் பயங்கரமான வன்முறைகளில் இருந்து உயிர்தப்பியவர்களின் கதைகளை செவிமடுத்தேன். உங்கள் கதைகளைப் பகிர்ந்துகொண்டமைக்கு நன்றி. உங்கள் வலிமை உங்களின் நம்பிக்கை மீண்டு எழும் திறன் ஆகிய வற்றை ஒருபோதும் நான் மறக்கமாட்டேன்" என்றும் அந்தப் பதிவில் அவர் தெரிவித்துள்ளார். (ம)

# தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யத் திட்டம்

கொழும்பு, ஜூலை 24
தேங்காய் எண்ணெய்யை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்குக் கொள்கை ரீதியான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தேங்காய்கள், நாட்டின் தேசிய நுகர்வுக்கும் கைத்தொழில் துறைக்கும் போதுமானதாக இல்லை என்று தெங்கு அபிவிருத்திச்சபை புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

இதனால்தான் தேங்காய் எண்ணெய்யை இறக்குமதி செய்யத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. நாம் தென்னை அபிவிருத்தித்துறையை மேலும் அபிவிருத்தி செய்யவேண்டும். அத்துடன், நாட்டுக்குத் தேவையான தேங்காய்களை பெற்று தெங்குச் செய்கையாளர்களைப் பாதுகாப்பதும் அவசியமாகும்- என்றார். (ச-இ)

# மரக்கறி விதை இறக்குமதி: 2030ஆம் ஆண்டில் நிறுத்தம்

2030ஆம் ஆண்டுக்குள் நாட்டில் மரக்கறி விதைகள் இறக்குமதி முற்றாக நிறுத்தப்படும் என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் பயிர்ச்செய்கைக்குத் தேவையான மரக்கறி விதைகளின் உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத்திட்டத்தை விவசாயத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது. இலங்கையில் பயிர்ச்செய்கைக்குத் தேவையான மரக்கறி விதைகள் அதிகளவில் இறக்குமதி செய்யப்படுவதால், இறக்குமதி செய்யப்படும் விதைகளுக்கு விவசாயிகள் அதிக விலை கொடுக்க வேண்டியுள்ளது.

இந்த விடயத்தை கருத்திற்கொண்டு நாட்டின் பயிர்ச்செய்கைக்குத் தேவையான மரக்கறி விதைகளின் உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ம)

# இறக்குமதி தே.எண்ணெய் வரி 25/=

கொழும்பு, ஜூலை 24
இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய்க்குப் புதிய வரி அடுத்த வாரத்திலிருந்து விதிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இதனைத் தெரிவித்தார். உள்ளூர் தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த வரி விதிக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய இறக்குமதி செய்யப்படும் ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெய்க்கு அடுத்த வாரம் முதல் 25 ரூபா வரி விதிக்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. (ச-இ)

# புலிகளின் கொள்கைக்கு ரெலிக்கொம் தாரைவார்ப்பு

நாலக புதுக்கதை



கொழும்பு, ஜூலை 24
ரெலிக்கொம் நிறுவனத்தின் 100 சதவீத பங்குகளையும் விடுதலைப் புலிகள் அமைப்பின் கொள்கையுடைய ஒருவர் கைப்பற்றவுள்ளார் என்று சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு இலாபமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்க அதாவது தனியார் மயப்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

நட்டமடையும் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தை மறுசீரமைக்கும் பணிகள் மந்தகதியில் உள்ளன. ஆனால் இலாபமடையும் ரெலிக்கொம் நிறுவனம், லங்கா மருத்துவமனை, லிட்ரோ நிறுவனம் ஆகியவற்றைத் தனியார் மயப்படுத்த அரசாங்கம் துரிதமாகச் செயற்படுகிறது. ரெலிக்கொம் நிறுவனத்தின் 100 சதவீத பங்குகளையும் விடுதலைப் புலிகள் அமைப்பின் கொள்கையுடைய ஒருவர் கைப்பற்றவுள்ளார்.

இது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும். தேசியப் பாதுகாப்புத் தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவின் அறிவுரையை அரசாங்கம் புறக்கணித்துள்ளது - என்றார். (ச-இ)

# அரசியல் ஆதாயத்துக்காக நாட்டைக் குலைக்காதீர்கள்

சாகல வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 24
அரசாங்கம் அரசியலுக்கு முன்னுரிமை வழங்கவில்லை. சிலர் அரசியல் ஆதாயத்துக்காக நாடு வங்குரோத்தடையும் வரை காத்திருக்கின்றனர். நாடு அபிவிருத்தியடைந்தால் அரசியல் ஆதாயம் பெறமுடியாது என எண்ணுகின்றனர். அரசியல் செய்வதைவிட, நாட்டைச் சரியான பாதையில் கொண்டு செல்வது எமது பொறுப்பு என்று ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் இளைஞர்களுக்கு சிறந்த எதிர்காலம் தேவை. இளையோரின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கு, ஒரு வலுவான உற்பத்திக் கைத்தொழிலையும், வளர்ச்சியடைந்த சுற்றுலாத் துறையையும் உருவாக்க வேண்டியது அவசியமாகும். நாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் சரியான முறையில் நடைமுறைப்படுத்த மேற்கொள்ள வேண்டிய மறுசீரமைப்புகளை அரசு மேற்கொள்கின்றது.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தைச் செயற்படுத்துவதன் மூலம் வங்கிகள் வீழ்ச்சி அடையும் எனவும் வைப்புத் தொகையை இழக்கநேரிடும் எனவும் ஓய்வூதிய நிதிகள் பலவீனமடையும் எனவும் அடிப்படையற்ற வதந்திகள் பரப்பப்படுகின்றன. இந்தக் கருத்துகள் அனைத்தும் மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

சிலர் அரசியல் ஆதாயத்துக்காக நாடு வங்குரோத்தடையும்வரை காத்திருக்கின்றனர். அரசியல் செய்வதைவிட, நாட்டைச் சரியான பாதையில் கொண்டு செல்ல வேண்டும். நாட்டை சரியான பாதையில் வழிநடத்தி, பாதுகாப்பான எதிர்காலத்தை இளைஞர்களுக்கு உருவாக்க வேண்டும் -என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு 10 . 04 . 1954



உதிர்வு 22 . 07 . 2023

## மயில்வாகனம் குகதாசன்

நவிண்டிலைப் பிறப்பிடமாகவும், இடைக்குறிச்சி வரணியை வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் குகதாசன் நேற்றுமுன்தினம் (22.07.2023) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் நாகேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான மெய்கண்டதேவர் பராசக்திப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், சத்தியதேவியின் அன்புக் கணவரும், சுதர்சன், சுலக்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பார்வதி, மௌலியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நிலா, ஆதவ் ஆகியோரின் பாசமிகு பேரனும், வசந்தா, சண்முகதாசன், சாரதா, யோகதாசன், கிருஷ்ணதாசன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், தேவகுமாரியின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.07.2023) செவ்வாய்க் கிழமை மு.ப. 09.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப.10.30 மணியளவில் முள்ளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
077 7730 221 குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## திரு. செபமாலை தோமஸ் ஞானேஸ்வரன்

(ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற உத்தியோகத்தர்)

பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும், அரியாலை 206, A.V றோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. செபமாலை தோமஸ் ஞானேஸ்வரன் நேற்று (23.07.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா செபமாலை, மேரி மாகிறற் செபமாலை தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும், புவனேஸ்வரி (ஓய்வுபெற்ற யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்) அவர்களின் பாசமிகு கணவரும், றஞ்சிற் தேவராஜன் ( ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி மற்றும் இயக்குனர் British College Of Language Learning), செல்வின் லொயிட் (முகாமையாளர், போதனாசிரியர் BCLL, உரிமையாளர் Loyd& Sons Travels) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான ஜெயமலர், செல்வநாயகம், பற்றிக் குணநாயகம், அன்னா றொசற், எட்வேட் அரியநாயகம் மற்றும் மரியநாயகம், ஜோசப் ராஜநாயகம், றெஜினாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஸ்ரெலா (போதனாசிரியர் BCLL), ஜனனி (போதனாசிரியர் BCLL) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நேதன் ஷேன் (மாணவன், புனித பத்திரிசியார் கல்லூரி), சஞ்சனா (மாணவி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ஜருசன் (மாணவன், பரியோவான் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.07.2023) திங்கட்கிழமை பி.ப. 1.00 மணியளவில் புனித அந்தோனியார் ஆலயம் பண்டத்தரிப்பில் இறுதி திருப்பலி நிறைவேற்றுவதற்காக கொண்டு செல்லப்பட்டு திருப்பலியின் பின் நல்லடக்கத்திற்காக புனித அந்தோனியார் ஆலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

# பெயர் மாற்றம்

3 ஆம் வட்டாரம் முள்ளியவளை, முல்லைத்தீவில் வசிக்கும் **ஜெயரஞ்சித்** ஆகிய நான் எனது பெயரை இன்றுமுதல் **ஜெயறெஜினா** என மாற்றிக்கொள்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**ஜெயறெஜினா**

(cs.51367) (N.1)

## தேவை

யாழ். பரமேஸ்வரா சந்தியில் அமைந்துள்ள வியாபாரக் கட்டடத்திற்கு மின்னிணைப்பு, குழாய் பொருத்தும் வேலைகள் தெரிந்த பராமரிப்பாளர் ஒருவர் பகுதி நேரமாக பணியாற்றுவதற்கு தேவை.

077 953 0496

## மணமகன் தேவை

1982th ஆண்டு, ரேவதி, கி.பா 7, BA பட்டதாரி அரச தொழில்புரியும் விவாகரத்து மணமகளுக்கு மணமகன் தேவை.

077 545 2892

# உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

எமது சங்கத்தில் கிளை முகாமையாளராக கடமையாற்றுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- சம்பளம் - ரூபா 25000.00
- ஏனைய படிகளும் வழங்கப்படும்

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை **பொதுமுகாமையாளர், உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், உடுப்பிட்டி** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களின் தொடர்புகளுக்கு: 021 226 4036.

**பொதுமுகாமையாளர்**
**உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்.**
**22.07.2023**

(cr.37297) (N.1)

# மரண அறிவித்தல்

## திருமதி வேலுப்பிள்ளை செல்லம்மா



தோற்றம் 20.08.1944 மறைவு 20.07.2023

நவக்கிரியைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை செல்லம்மா கடந்த (20.07. 2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2023) திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நிலாவரை இந்து மாயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சிறுப்பிட்டி மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்
தொடர்பு: 077 576 9387

# மரண அறிவித்தல்

## மணியம் குணசேகரம் (வெள்ளைக்குட்டி)



பிறப்பு 09.04.1964 இறப்பு 18.07.2023

உரும்பிராய் மேற்கு, விளாத்தியடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட மணியம் குணசேகரம் (வெள்ளைக்குட்டி) கடந்த 18.07.2023 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு மணியம் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், பசுபதி முருகையா கொங்காதேவி தம்பதியரின் பாசமிகு மருமகனும், குலநாயகி (வவா) அவர்களின் அன்புக் கணவரும், வினிசன், அபிசன், விகாசினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அறிவழகி, ராணிமலர், ஞானசேகரம், குகதாசன் (அப்பன்) ஆகியோரின் சகோதரனும், துர்க்காதரன் குலவானி, குமுதினி, நிலானி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தர்சினி, சுபாஜினி, சுதர்சினி, சுரேக்கா, சுபாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தவராசா, சசிகுமார், அசோக் ஆகியோரின் சகலனும், கந்தசாமி, காலஞ்சென்ற வல்லிபுரநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.07.2023) செவ்வாய்க்கிழமை ஜேர்மனி Hauptfriedhof Heilbronn Wollhausst ra Be 132, 74074, Heilbronn உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று (இலங்கை நேரம் 12.00 மணியில் இருந்து 4.00 மணிவரை இறுதிக்கிரியை நிகழ்வு நடைபெறும்.

அன்னாரின் இறுதிக்கிரியை நிகழ்வு உரும்பிராய் மேற்கில் உள்ள அரவது இல்லத்தில் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும் என்பதனை அறியத்தருகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளாத்தியடி,
உரும்பிராய் மேற்கு. (cs 25614) (N-1)

தகவல்:
மணியம் குடும்பத்தினர்
பசுபதிமுருகையா (மாமன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 02 . 1940



இறப்பு 23 . 07 . 2023

## திருமதி இராசமணி ஞானப்பிரகாசம்

நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி ஞானப்பிரகாசம் நேற்று (23.07.2023) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்ற ஈசாக் மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற ஜசக் ஞானப்பிரகாசத்தின் பாசமிகு மனைவியும். காலஞ்சென்றவர்களான அரியமணி. கனகமணி. ஞானசிகாமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்றவர்களான சேவக்.ஜசக் இயேசுசகாயம் (சின்னண்ணன்). பொன்னுத்துரை. அருளையா மற்றும் திரு ஜசக் தம்பிராஜா (அவுஸ்திரேலியா). அருட்திரு ஜசக் செல்வரட்ணம் (கனடா). ஆகியோரின் மைத்துனியும். ஞானக்கனி. றொபின் (ஜேர்மன்). வசந்தி (டென்மார்க்). ஜெயந்தி (உடுவில் மகளிர் கல்லூரி). துஸ்யந்தி (வட்டு மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும். இயேசுரட்ணம்.ஜெயந்தினி (ஜேர்மனி). தேவரூபன் (டென்மார்க்) அருள் றொகான். (MSO - RDHS- Office), டிலான் (Durdans Lab) ஆகியோரின் பாசமிகு மாமியாரும். குணாளன். ஜெரூசன். நிரோஜன். அபிநயா. அனுசியா. அகலியா.சபினா. ஆரோன். எப்சிபா. அபிசேக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்.ஆரிஸின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (24.07.2023) பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் நவாலி C.A.C.M சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

முருகமூர்த்தி கோவில் வீதி,
நவாலி கிழக்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
077 306 8122

(cs51365 (N-1)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் வித்தாக 09 . 02 . 1951



வானவர் சொத்தாக 04 . 08 . 2022

## அமரர் பத்மகுமார் ரஞ்சினி (கமலேஸ்வரி)



திதி: ஆடி வளர்பிறை சஷ்டி

அண்ணா அண்ணா என
என்னை பாசமுடன்
அழைத்து ஆனந்தித்து உறவாடிய
என் அன்புத் தங்கையே
உன் பிரிவை நினைந்து நினைந்து
கண்ணீர் வடிக்கிறேனம்மா!
ஆண்டு ஒன்றென்ன எத்தனை
ஆண்டானாலும் உன்
நினைவுகளோடு வாழும்
உன் அன்பு அண்ணா



(cs.21269) (2.6)

உரும்பிராய் வடக்கு.

உமது பிரிவால் வாடும்
கருணாகரன் (கருணை)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் கணேசமூர்த்தி இராசலட்சுமி

திதி: சஷ்டி

தோற்றம் 20.07.1952 மறைவு 24.06.2023

நாள்கள் முப்பத்தொன்று சென்றாலும்
அகலவில்லை எங்கள் துயரம் தாயே!
மனம் உங்களைத் தேடுகிறது
நினைவுகள் ரணங்களாய்க் கொல்கின்றன
குடும்பத்தின் ஒளிவிளக்காய் அனைவருடனும்
கலகலப்பாகப்பேசி மகிழ்விக்கும்
உங்கள் சிரித்தமுகம் கண்களில் தொடர்ச்சியாகத்
தோன்றிய வண்ணம் இருக்கின்றது
இவ்வளவு விரைவாக எங்களை
- விட்டுப்பிரிவீர்கள் என்று
கணப்பொழுதுகூட நாங்கள் நினைக்கவில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

கேணியடி 1ஆம் ஒழுங்கை,
அராலி,
கொக்குவில் மேற்கு.

(cs 51371) (N.1)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிக்குவுடன்...

பட்டு சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள குருந்தூர் மலை பௌத்த விகாரைக்கு நேற்றுச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளதோடு அங்குள்ள விகாராதிபதியுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர். (அ-ஓ,இ)



## தமிழர்களின்...

தனிநாடு வேண்டும் என்றோ ஒருபோதும் கோரவில்லை - இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

தமிழர்கள் ஒற்றையாட்சியைக் கோருகிறார்களா? சமஷ்டியாட்சியைக் கோருகிறார்களா? தனி நாட்டைக் கோருகின்றனரா? என்பதை அறிய துணிவு இருந்தால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றத்தில் சவால் விடுத்திருந்தார். இது தொடர்பில் பிரதமரிடம் கேட்டபோது,

'சமஷ்டிக் கோரிக்கையையும் தனி நாட்டுக் கோரிக்கையையும் விடுதலைப் புலிகளும் தமிழ் அரசியல் வாதிகளும்தான் கோரி வந்தனர். ஒரு பக்கத்தில் தமிழ் அரசியல்வாதிகள் சமஷ்டி வேண்டும் என்று கோர மறுபக்கத்தில் விடுதலைப் புலிகள் தனி நாடு வேண்டும் என்று கோரினார்கள். இறுதியில் ஒன்றும் நடக்கவில்லை. இந்த ஒற்றையாட்சி நாட்டுக்குள்தான் மூவின மக்களும் இன்று வாழ்கின்றார்கள்' என்றார் பிரதமர். (அ-ஓ,5,22)

## சிறுமி...

வட்டுக்கோட்டை, முதலி கோவிலடியைச் சேர்ந்த கேதீஸ்வரன் தர்மிகா (வயது - 17) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த நான்கு மாதங்களாக சிறுமி கல்வியங்காடு சட்டநாதர் கோவில் அருகே உள்ள வீட்டில் தங்கி நின்று வீட்டுப் பணி புரிந்துள்ளார். இந்நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை வீட்டில் தங்கியிருந்த குடும்பத்தினர் நிகழ்வொன்றுக்குச் சென்று விட்டு திரும்பி வந்து பார்க்கையில் சிறுமி தூக்கில் தொங்கியவாறு காணப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சிறுமியைப் பார்க்க யாரும் வரக்கூடாது என்று தெரிவித்த வீட்டு உரிமையாளர் மாதத்தில் ஒரு முறை மாத்திரம் கதைக்கமுடியுமெனத் தெரிவித்ததாக சிறுமியின் உறவினர்கள் குற்றஞ்சாட்டுவதுடன் உயிரிழப்பில் மர்மம் உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

சடலத்தைப் பார்வையிட்ட திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகள் இன்று முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-ஓ,26,125)

## இந்தியா...

அச்சுறுத்தலாகும் - இவ்வாறு ஆளும் கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்தின்போது இலங்கையையும் இந்தியாவையும் நில ரீதியாக இணைப்பது தொடர்பான சாத்தியப்பாட்டு ஆய்வுக்கு இணக்கம் காணப்பட்டது. இது தொடர்பில் சரத் வீரசேகரவிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

'முன்னாள் கடற்படைத்தளபதி என்ற ரீதியிலும் மக்களின் பிரதிநிதி என்ற ரீதியிலும் இந்தக் கருத்தை அரசிடம் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தியா காலூன்றினால் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இலங்கையில் இருந்து துண்டாடப்படும். இதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் இடமளிக்கக்கூடாது. அது தேசிய பாதுகாப்புக்கு மிகவும் அச்சுறுத்தலானது' - என்றார். (அ-ஓ,5,22)

## வாள்வெட்டு...

துடன் 10 பேர் காயமடைந்தனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் பல்வேறு கோணங்களிலும் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

சம்பவம் இடம்பெற்ற வீட்டில் தங்கியிருந்த சுகந்தன் என்ற நபரை இலக்கு வைத்தே வன்முறைக் கும்பல் வந்துள்ளது. சுகந்தனின் மனைவியான பாத்திமா சம்மா சபீதீர் (வயது - 21) என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்த பெண் மற்றும் அவரது கணவர் இருவரும் கொழும்பில் வசித்து வரும் நிலையில் கடந்த 6 நாள்களாகவே இந்த வீட்டில் தங்கியுள்ளனர். இந்த வீடு பெண்ணின் ஒன்றுவிட்ட சகோதரனுடையது. அந்த வீட்டில் வசிக்கும் இளம்பெண்ணின் பிறந்த நாளுக்கு நள்ளிரவு 12 மணியளவில் கேக் வெட்டியுள்ளனர். சிறிது நேரத்தில் கூப்பிடும் சத்தம் கேட்டதும் வீட்டின் உரிமையாளர் வெளியில் சென்று கதவைத் திறந்துள்ளார்.

வீட்டின் உரிமையாளர், வந்தவர்கள் யார் என்று விசாரித்துள்ளார். அப்போது அந்தக் கும்பல் 'சுகந்தன் உள்ளாரா?' எனக் கடும் தொனியில் கேட்டுள்ளது. அவர் இல்லை என்று வீட்டு உரிமையாளர் தெரிவிக்க, கோபமடைந்த வன்முறைக் கும்பல் அவர் மீது வாள்வெட்டுத்தாக்குதலை மேற்கொண்டது. காயமடைந்த அவர் தப்பிக்கும் நோக்குடன் வீட்டினுள் ஓடிச்சென்றார்.

அவரைப் பின்தொடர்ந்து வந்த வன்முறைக் குழு, வீட்டுக்குள் நுழைந்து, சுகந்தன் எங்கே? எனக் கேட்டு அச்சுறுத்தியுள்ளது. சுகந்தன் அறையினுள் இருப்பதை அறிந்துகொண்ட குழு அவரை வெளியில் வருமாறும் இல்லாவிடின் வீட்டைக் கொளுத்துவோம் என்றும் எச்சரித்துள்ளது. 'வீட்டினுள் பெண்கள் சிறுவர்கள் உள்ளனர். எனவே அவ்வாறு செய்யவேண்டாம்' என அங்கிருந்த பெண்கள் வன்முறைக் கும்பலிடம் மன்றாடியுள்ளனர். அதனைப் பொருட்படுத்தாத கும்பல் தாம் கொண்டுவந்த பெற்றோலை ஊற்றி வீடு முழுவதும் தீ வைத்தது. வீட்டின் உள் அறையிலிருந்த சுகந்தனும், மனைவியும் வெளியே ஓடிவந்த போது, தீயில் சிக்கினர். சுகந்தனின் பிடியிலிருந்து மனைவி தவறியிருக்கலாமென ஊகிக்கப்படுகிறது. காயங்களுடன் சுகந்தன் வீட்டிலிருந்து வெளியே தப்பியோடினார். தீ அணைக்கப்பட்ட பின்னர், வீட்டுக்குள்ளிருந்து 21 வயதான சுகந்தனின் மனைவியின் சடலம் மீட்கப்பட்டது. 35 வயதான சுகந்தன் கடுமையான எரிகாயங்களுடன் மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவத்தில் 2 வயதுடைய சிறுவன், 7 மற்றும் 13 வயதுடைய இரண்டு சிறுமிகள் மற்றும் வீட்டு உரிமையாளரான சுரேஸ் (வயது - 43), தாரணி (வயது - 46), தர்சினி (வயது - 35), சப்னா (வயது - 19) ஆகியோர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

"இரவு 12.30 மணியளவில் குறித்த வீட்டில் ஐயோ! காப்பாற்றுங்கள் என்ற அலறல் சத்தம் கேட்டது" என்று அருகில் வசிக்கும் பெண் ஒருவர் தெரிவித்தார். சத்தத்தையடுத்து ஓடிச்சென்று பார்த்தநிலையில், வீடு முழுவதும் புகைமூட்டமாக இருந்ததுடன், சிலர் எரிகாயங்களுடன் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்ததாகத் தெரிவித்தார். உடனடியாக அம்புலன்ஸுக்கு அழைப்பை ஏற்படுத்தி அதில் சிலரை ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததுடன், இரு ஆண்களை முச்சக்கர வண்டியில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் அயலவர் குறிப்பிட்டார்.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் வீட்டைச் சுற்றியுள்ள கண்காணிப்பு கமராக்காட்சிகளைப் பதிவுசெய்துள்ளனர். கறுப்பு உடை அணிந்து முகத்தை மறைத்தபடி 4 - 5 மோட்டார் சைக்கிளில் 10 பேர் கொண்ட வன்முறைக் கும்பல் ஆயுதங்களுடன் சென்றமை தெரிய வந்துள்ளது.

வன்முறைக் கும்பல் தேடி வந்த சுகந்தன் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய வழக்குகள் சிலவற்றில் சந்தேகநபராகப் பெயரிடப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. பழிவாங்கும் நோக்குடன் இந்தச் சம்பவம் இடம்பெற்றதா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். உயிரிழந்த பெண்ணின் உடற்கூற்றுப் பரிசோதனைகள் இன்று முன்னெடுக்கப் படவுள்ளன. (அ-ஓ,18,110)


## வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம்

### ஆலய குருக்கள் மற்றும் ஆலய முகாமையாளர் தேவை

வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி ஆலயத்துக்கு நித்திய நைமித்திய மற்றும் அபிசேகங்கள், கிரகதோசங்கள், திருமண வைபவங்கள் யாவும் ஆகம விதிப்படி நடத்தக்கூடிய பிராமண சமூகத்தைச் சேர்ந்த குருக்கள் தேவை.

அத்துடன் இந்து சமய நடைமுறைகள் தெரிந்த ஆலய முகாமையாளரும் தேவை.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆலய குருக்களுக்கும் ஆலய முகாமையாளருக்கும் ஆலயத்துக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய குடும்ப விடுதி வழங்கப்படும். (CS 51363)AH-1

ஆலய பரிபாலன சபையினர்

ஆலயம் - 024 222 1408

செயலாளர் - 077 151 7207


077 401 5955



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 04 - 01 - 1948

ஆண்டவன் அடியில் 04 - 08 - 2022




### அமரர் இராசையா நடராஜசுந்தரம்

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
எம்முடன் இருப்பீர்கள்

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுப்பு ஜூலை நினைவேந்தலை முன்னிட்டு கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சியில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் கலந்துகொண்டுள்ளார். (ஒ-5)



# மகாவிகாரை அபிவிருத்தி துரிதமாக முன்னெடுங்கள்

## அநுராதபுரத்துக்கு தனிச்சட்டம் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

**அநுராதபுரம், ஜூலை 24**

**மகா விகாரை அபிவிருத்தித் திட்டத்துக்கு முன்னுரிமை அளித்து அநுராதபுரம் புனிதபூமி அபிவிருத்தித் திட்டத்தைத் துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.**

அநுராதபுரம் - பொமலு விகாரையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடைபெற்ற மகாவிகாரை அபிவிருத்தித் திட்டம் மற்றும் அநுராதபுரம் புனிதபூமி அபிவிருத்தித் திட்டம் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

உலக நாடுகள் இன்று தமது கடந்தகால நாகரிகத்தை முன்னிலைப்படுத்தி முன்நோக்கிச் செல்லும்போது, பெருமைமிக்க நாகரிகம் மற்றும் வரலாற்றைக் கொண்டிருப்பதாகக் கூறும் நாம் அது தொடர்பில் உரிய கவனம் செலுத்துவதில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மகாவிகாரை வளாகத்தில் தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின்போது கண்டுபிடிக்கப்பட்டவைகள் தொடர்பில் கேட்டறிந்த ஜனாதிபதி, மகாவிகாரை வளாகத்தின் எல்லைகளைத் துரிதமாகக் கண்டறியுமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

மேலும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மரபுரிமையைப் பாதுகாக்கும் வகையில் அநுராதபுரத்துக்கெனத் தனித்துவமான புதிய சட்ட முறைமையைக் கொண்டு வர எதிர்பார்க்கப்படுவதாகஜனாதிபதிரணில்குறிப்பிட்டுள்ளார்.

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாக்கவேண்டும் எனக் கோரி தொல்பொருள் திணைக்களம் எனக்குக் கடிதம் அனுப்புகிறது. அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால், இந்த மகாவிகாரையில் மேற்கொள்ள வேண்டிய பிரதான பணிகளை நாம் நினைவில் கொள்ள வேண்டும் என்று ரணில் தெரிவித்துள்ளார். (அ-ஒ,இ)

## சீனாவின் எரிபொருள் அடுத்த மாதம் வருகிறது

சீனாவின் சினோபெக் நிறுவனத்தின் முதல் இரண்டு எரிபொருள் தொகுதிகள் அடுத்த மாத ஆரம்பத்தில் நாட்டை வந்தடையவுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்மூலம், நாட்டிலிருந்து வெளியேறும் டொலரின் அளவைக் குறைக்க முடியுமெனவும், இதற்கமைய நிதி அமைச்சுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு 'க்யூஆர்' குறியீட்டின் எரிபொருள் ஒதுக்கீடுகளை அதிகரிக்க முடியும் அல்லது 'க்யூஆர்' குறியீட்டை முழுமையாக நீக்கமுடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-ஒ,இ)

## மன்னார், பூநகரி காற்றாலை 2025 ஜனவரியில் நிறைவு

### அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

மன்னார் மற்றும் பூநகரியில் 500 மெகாவாட்ஸ் சூரியசக்தி மற்றும் காற்றாலை மின் திட்டத்தை 2025ஆம் ஆண்டு ஜனவரிக்குள் நிறைவு செய்ய கௌதம் அதானி உறுதியளித்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.


இந்தத் திட்டத்துக்கு பிரதேச மக்கள் எதிர்ப்பு வெளியிட்டு வரும் நிலையில், இந்தியாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவுடனான சந்திப்பின் போது அதானி இந்த உறுதிமொழியை வழங்கியதாக அமைச்சர் குறிப்பிட்டார். (அ-ஒ,இ)

## குடத்தனையில் ஆயுதங்கள் மீட்பு

யாழ்., ஜூலை 24

வடமராட்சி கிழக்கு, குடத்தனை கடற்கரையிலிருந்து ஆயுதங்கள் பருத்தித்துறைப் பொலிஸாரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் இளைஞர்கள் உள்ளிட்டோர் இருப்பது வழக்கம். அங்குள்ள ஆலயத்தில் இடம்பெற்ற நிகழ்வுக்குச் சென்று திரும்பிய சிலர் அங்கு படுத்துறங்கியுள்ளனர். படுத்துறங்கிய ஒருவரின் காலில் அடையாளம் தெரியாத பொருள் ஒன்று தட்டுப்பட்டுள்ளது. காலை எழுந்து பார்த்தபோது நீல நிற பரல் ஒன்றின் மேற்பாகம் மணலின் மேற்பரப்பில் தெரிந்த நிலையில் காணப்பட்டுள்ளது. இதுதொடர்பில் பிரதேசவாசிகளால் கிராம அலுவலருக்குத் தகவல் தெரியப்படுத்தப்பட்டது. இதையடுத்து பருத்தித்துறை பொலிஸாரால் மேற்படி பகுதியில் அகழ்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது.



இதன்போது ரி-56 ரக துப்பாக்கிகள் -2, அதற்கான மகஸின்கள் 8, அதற்கான தோட்டாக்கள் அடங்கிய பெட்டிஒன்றுஎன்பனமீட்கப்பட்டுள்ளன. (அ-ஒ,26,27)

வெற்றிலைக்கேணி கடற்படைமுகாமில்

## மக்கள் - அதிகாரிகள் சனியன்று முரண்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 24

கைதான மீனவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட மீன்களை வியாபாரிகளுக்கு அதிகாரிகள் விற்பனை செய்வதாகக் குற்றம் சுமத்தி கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் கடற்படையினருடன் மக்கள் முரண்பட்டனர்.

வெற்றிலைக்கேணி கடற்படை முகாமில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

சட்டவிரோதமாக ஒளிபாய்ச்சி மீன்பிடித்ததாகத் தெரிவித்து வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த மீனவர்கள் சிலர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் வெற்றிலைக்கேணி கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். கைதானவர்களிடமிருந்து பறிமுதலான மீன்களை வியாபாரிகளுக்கு விற்பனை செய்துள்ளதாகக் கைதானவர்களின் உறவினர்கள் குற்றம் சுமத்தினர். விற்பனை ஊடாகக் கிடைக்கும் பணத்தை கடற்படையினரும், கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளும் பங்கிடுவதாகவும் குற்றம் சுமத்தினர். இதனால் கடற்றொழில் நீரியல்வளத் துறை அதிகாரிகள் மக்களுடன் முரண்பட்டனர். இதனைப் பதிவு செய்த ஊடகவியலாளருக்கும் அதிகாரிகள் அச்சுறுத்தல் விடுத்தனர்.

இதேவேளை - தென்னிலங்கை மீனவர்கள் கடலில் ஒளி பாய்ச்சி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டால் அவர்களுக்கு கடற்படையினரும், கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளும் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் மக்கள் குற்றம் சுமத்தினர்.

இது தொடர்பில் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் மற்றும் கடற்படையின் கருத்தை உடனடியாக அறியமுடியவில்லை. (அ-ஒ,27)

## ரயிலோடு மோதிய லொறி!

வவுனியா, ஜூலை 24

தாண்டிக்குளத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ரயில் விபத்தில் இருவர் காயமடைந்துள்ளதுடன், பாரவூர்தி (லொறி) ஒன்றும் சேதமடைந்துள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த கடுகதி ரயிலோடு, திருநாவற்குளத்திலுள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் கடக்க முயன்ற பாரவூர்தி மோதுண்டது. விபத்தில் பாரவூர்தியின் சாரதி படுகாயமடைந்துள்ளதுடன், மற்றொருநபர் சிறுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் மோட்டார் சைக்கிள் இதேரயிலுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,18,110)

## இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட 162 கிலோ கஞ்சா நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

மருதங்கேணி கடற்பரப்பில் வைத்து 162 கிலோ 400 கிராம் எடையுடைய கேரளக் கஞ்சா கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர் ஒருவரும் கைதாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது. கஞ்சாவை கடத்திக்கொண்டு வரப்பயன்படுத்திய படகும் மீட்கப்பட்டு மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-ஒ,27,113)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயகமெங்கும் நினைவேந்தல்கள்...

தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பல தரப்பினராலும் கடைப்பிடிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ். பொது நூலகத்துக்கு அருகாமையில் நேற்றுமாலை நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டது. பொதுச் சுடரை மாவீரரின் தந்தையொருவர் ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து ஏனையவர்களும் சுடரேற்றி அஞ்சலி செய்தனர்.

நினைவேந்தல் பதாகையில் 1983 கறுப்பு ஜூலை தமிழினப் படுகொலையானது சிறிலங்கா அரசாங்கத்தால் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டது என்றும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட 53 தமிழ் அரசியல் கைதிகளையும் நாடு முழுவதும் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களையும் நினைவுகூருகிறோம் எனவும் 1948 முதல் இன்றுவரை நடைபெற்ற நடைபெறுகின்ற இன அழிப்பை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரிக்கவேண்டும் என்றவாறாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் எனப் பலரும் பங்கேற்றனர்.


இதேவேளை - கறுப்பு ஜூலை 40ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 'இனவாதம் ஒழிக' கொடும்பாவியை எரித்து தமிழ் அரசுக் கட்சியினர் கவனவீர்ப்புப் போராட்டத்தை நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு முன்னெடுத்தனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வடமராட்சிக் கிளை இளைஞரணியினரால் வடமராட்சி - நெல்லியடி மத்திய பேருந்து நிலையப் பகுதியில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 'இனவாதம் ஒழிக' என அடையாளப்படுத்தப்பட்ட கொடும்பாவியை இழுத்துச் சென்று தீயிட்டு கவனவீர்ப்புப் போராட்டத்தை அவர்கள் மேற்கொண்டனர்.

இதன்போதுஅவர்கள் தம் கைகளில் தீப்பந்தங்களை ஏந்தியவாறு 'வேண்டாம் வேண்டாம் இனவாதம் வேண்டாம். வேண்டும் வேண்டும் தமிழர்களுக்கு தீர்வு வேண்டும்' என்ற கோஷங்களை எழுப்பியவாறு 'இனவாதம் ஒழிக' உருவப் பொம்மைக்குத் தீயிட்டு எரியூட்டியிருந்தனர்.

மேலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் கறுப்பு ஜூலை இனப்படுகொலை நினைவேந்தல்கள் கடைப்பிடிக்கப்பட்டன. (அ-ஒ.27,66,125)



## கறுப்பு ஜூலை நினைவு நாளில்...

கொழும்பு, பொரளை பொதுமயானத்துக்கு முன்பாக (முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்ட இடம்) கறுப்பு ஜூலை நினைவு நாளை நேற்று மாலை கடைபிடிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நினைவேந்தலை சிங்கள ராவய அமைப்பு குழப்ப உள்ளதாகக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கு அமைவாக அந்தப் பகுதியில் ஆயுதம் ஏந்திய இராணுவத்தினர், பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் பலர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. போர்க்களம்போன்று அந்தப் பகுதி காணப்பட்டது.

திட்டமிட்டவாறு மாலை 4.30 மணிக்கு நினைவேந்தல் சுடர்கள் ஏற்ற முற்பட்டபோது அங்கு வந்த சிங்கள ராவயவினர் குழப்பங்களை விளைவித்தனர். இதனையடுத்து விசேட அதிரடிப் படையினரும், பொலிஸாரும் இணைந்து நினைவேந்தல் ஏற்பாட்டாளர்களை அங்கிருந்து வெளியேற்ற முயன்றனர். அவர்களை ஜெயரத்ன மலர்ச்சாலைப் பக்கம் (எதிர்த்திசை) தள்ளிச் சென்றனர். இதன்போது சிறிதுங்க ஜெயசூரிய, சிறிநாத் பெரேரா ஆகியோர் நிலத்தில் விழுந்து காயமடைந்தனர்.

வீதியின் மறுபுறத்தில் பொலிஸார் தள்ளிச் சென்றுவிட்டதும் ஏற்பாட்டாளர்கள் அங்கு சுடரேற்றத் தயாராகினர். அங்கு சுடர் ஏற்றப்பட்டுக்கொண்டிருந்தபோது சிங்கள ராவய அமைப்பினர் அங்கும் வந்து குழப்பங்களை ஏற்படுத்தினர். இதனையடுத்து பொலிஸார், இராணுவத்தினர் அங்கு வந்து நினைவுச் சுடர்களை சப்பாத்துக்கால்களால் தட்டி அகற்றினர். இதனையடுத்து ஏற்பாட்டாளர்கள் பொலிஸார், இராணுவத்தினருடன் கடுமையாக முரண்பட்டனர். சுடரேற்றுவதற்கு அனுமதிக்காவிடின் உயர்நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்வோம் என்று கடும் தொனியில் எச்சரித்த பின்னரே பொலிஸார் ஒதுங்கினர்.

ஆனாலும் சிறிது நேரத்தில் மீண்டும் அங்கு வந்த பொலிஸாரும், இராணுவத்தினரும் சுடர்களை அப்புறப்படுத்தினர். இதன்போது சந்தியா எக்னெலிகொடவுக்கு முகத்தில் எண்ணெய் சிந்தியது. அவர் முகத்தைக் கழுவுவதற்குக் கூட பொலிஸாரும், இராணுவத்தினரும் இடமளிக்கவில்லை. நிலத்தில் அவரையும் தள்ளி விழுத்தினர். இதன் பின்னர் ஏற்பாட்டாளர்களை அங்கிருந்து நாரஹேன்பிட்டிய பக்கமாக பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து தள்ளிச் சென்றனர். ஏற்பாட்டாளர்களின் எதிர்ப்பையும் மீறி வலுக்கட்டாயமாக அங்கிருந்து வெளியேற்றினர்.

இதேவேளை- கறுப்பு ஜூலையை முன்னிட்டு சோஷலிஸ இளைஞர் சங்கத்தின் போராட்டத்தை பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டு கலைத்துள்ளனர். கொழும்பு நகர மண்டபத்துக்கு அருகில் வைத்து பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர். பேரணியில்கலந்துகொள்ள சோஷலிஸ இளைஞர் சங்கத்தின் எரங்க குணசேகர மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் பிமல் ரத்நாயக்க ஆகியோருக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

லிப்டன் சுற்றுவட்டத்துக்குப் பேரணியாக வந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், அங்கிருந்து விகாரமஹாதேவி பூங்கா நோக்கிச் செல்ல முற்பட்ட போது பொலிஸார் மற்றும் கலகத் தடுப்புப் பிரிவினர் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர். (அ-ஒ.5)

## கறுப்பு ஜூலை இனப்படுகொலை...

1983ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவது சவாலுக்குரியதாகக் காணப்படுகிறது. ஒரு சில அரசியல்வாதிகள் இனவாதம், மதவாதம் ஆகியவற்றை தோளில் சுமந்து இனக்கலவரத்தைத் தோற்றுவித்தார்கள் என்று நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

ஜனநாயக சீர்த்திருத்தங்களுக்கான மக்கள் இயக்கம் 'மீண்டுமொரு கறுப்பு ஜூலை வேண்டாம்' என்ற தொனிப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்திருந்த கூட்டு பேச்சு நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் உள்ள கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கறுப்பு ஜூலை இடம்பெற்று 40 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள பின்னணியில் பல விடயங்கள் கடுமையாகத் தாக்கம் செலுத்தியுள்ளன. கறுப்பு ஜூலை சம்பவத்தை துரதிர்ஷ்டவசமானதாகக் கருத வேண்டும். பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இருந்து அரசமைப்பு ஊடாக இனவாரி ரீதியில் மக்கள் வேறுபடுத்தப்பட்டார்கள், பிரதேசவாரியாக மக்கள் வேறுபடுத்தப்பட்டார்கள். மக்கள் மத்தியில் இனவாதம் தோற்றம் பெறுவதற்கு அது ஆரம்பமாக இருந்தது.

சுதந்திரத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த ஒரு சில அரசியல்வாதிகள், அரச தலைவர்கள் இனவாதத்தையும் மதவாதத்தையும் தோளில் சுமந்து கொண்டு சென்றார்கள். இதனால் இலங்கையில் வாழ்ந்த மக்கள் இலங்கையர் என்ற அபிமானத்துடன் வாழ முடியாமற்போனது.

1977ஆம் ஆண்டு தேர்தல் இடம்பெற்றபோது நாட்டில் பல்வேறு பகுதியில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன. 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி மிலேச்சத்தனமான முறையில் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான வன்முறை தமிழ் மற்றும் சிங்கள இனத்தவர்களுக்கு இடையில் இரும்பு வேலியை அமைத்தது. இலங்கையர் என்ற அடிப்படையில் இருந்துகொண்டு சிந்திப்பதை விட சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற வரையறைக்குள் இருந்து கொண்டு செயற்படும் நிலை தோற்றம் பெற்றது. இவ்வாறான நிலையில் நாடு என்ற ரீதியில் முன்னேற்ற முடியாது.


புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு, தேசிய நல்லிணக்கம் உள்ளிட்ட காரணிகளுக்காகப் பல்வேறு திட்டங்களுக்கான ஆரம்பக்கட்ட பேச்சுகளை முன்னெடுத்துள்ளோம். கறுப்பு ஜூலை சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குதல் பிரதான சவாலாக உள்ளது. தென்னாபிரிக்கா நாட்டின் மாதிரியிலான வகையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆரம்பக்கட்ட நடவடிக்கை முழுமைப் படுத்தப்பட்டுள்ளது. மக்களின் அபிலாஷைகளைப் பெற்றுக்கொள்வதற்கு விரிவுபடுத்தப்பட்ட பேச்சை முன்னெடுப்பது அவசியமாகவுள்ளது. நாட்டில் மீண்டும் கறுப்பு ஜூலை சம்பவம் தோற்றம் பெறாமல் இருப்பதற்கான கட்டமைப்பை உருவாக்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். சந்தர்ப்பவாத அரசியல் செயற்பாடுகளால் பல தீர்மானங்களைச் செயற்படுத்த முடியாமல் உள்ளது. கறுப்பு ஜூலை சம்பவம் இலங்கையில் அல்ல உலகில் எந்த நாட்டிலும் தோற்றம் பெறக் கூடாது - என்றார். (அ-ஒ,இ)

## கறுப்பு ஜூலையில் கொல்லப்பட்டவர்கள்...

முடியாது - இவ்வாறு சிங்கள ராவய அமைப்பினர் கோஷம் எழுப்பினர். பொரளை பொதுமயானத்துக்கு அருகில் கறுப்பு ஜூலை இனப்படுகொலை நினைவேந்தல் நேற்று கடைப்பிடிக்கத் திட்டமிட்ட நிலையில் சிங்கள ராவயவினர் அங்கு வந்து குழப்பம் விளைவித்தனர். இதன்போதே இவ்வாறு கோஷம் எழுப்பினர். 'புலம்பெயர் தமிழர்கள் நாட்டைப் பிரிக்க முயல்கிறார்கள். அரச சார்பற்ற நிறுவனங்களிடம் பணத்தைப் பெற்று இப்படியான நினைவேந்தல்களை இங்கு செய்யவேண்டாம்' என்றும் கோஷம் எழுப்பினார்கள். (அ-ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றுமதி வளங்களை இலங்கை கையாள்வதற்குத் தவறுகின்றது




## உலக வங்கி தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 24**

**இலங்கையில் அதிகமான அளவில் ஏற்றுமதித் திறன்கள் உள்ள போதிலும் அதனை உரிய முறையில் இலங்கை அரசு பயன்படுத்தத் தவறுகின்றது என உலக வங்கி தெரிவித்துள்ளது.**

'இலங்கையின் மீட்சியை நோக்கிய பசுமை மீள்தன்மை மற்றும் அபிவிருத்தி' எனும் தொனிப்பொருளிலான கருத்தரங்கில் பங்கேற்று உரையாற்றுகையில் உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி பாரிஸ் ஹடாட் சேவோஸ் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதாரத்தில் பின்னடைவை எதிர்நோக்கியுள்ள இலங்கை, கடந்த ஒரு வருட காலப்பகுதியில் சிறந்த முன்னேற்றத்தை நோக்கி நகர்கிறது. ஆயினும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டிய அவசியத்தைத் தவறவிட்டுள்ளனர்.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்களை உற்பத்தி செய்வதற்கான மூலக்கூறுகள் அதிகளவில் இலங்கை நாட்டில் கொட்டிக்கிடக்கின்றன. ஆயினும் அது உரிய முறையில் பயன்படுத்தப்படுவ தில்லை. அதனால் ஏற்றுமதி மூலம் பெறக்கூடிய கணிசமான வருவாயை இலங்கை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

# போதைப்பொருள் சோதனை: இதுவரை 78,169 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 24

இந்த ஆண்டு ஆரம்பம் முதல் கடந்த 15ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் சோதனையில் 78 ஆயிரத்து 169 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

சோதனை நடவடிக்கையின்போது 389 கிலோ 721 கிராம் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப் பொருளுடன் 32 ஆயிரத்து 361 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 5 ஆயிரத்து 654 கிலோகிராம் கஞ்சாவுடன் 34ஆயிரத்து 486 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதேவேளை ஐஸ் போதைப்பொருள் மற்றும் ஏனைய போதைப்பொருள்களுடன் 11 ஆயிரத்து 322 பேர் குறித்த காலப்பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)


## மேற்பார்வையாளர் தேவை

கருணாலயம் அன்னை கிருஷ்ணாபாய் மகளிர் இல்லத்தில் தங்கி நின்று வேலை செய்ய அனுபவமுள்ள பெண் மேற்பார்வையாளர் தேவை. வயதெல்லை 30 -45 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும். உடன் தொடர்பு கொள்ளவும்.

021 222 8490, 021 721 0910

(CS/25592)AH-1

## கனடா விசாக்கள் -CANADA VISA

1. Work Permit – பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன. வேலை அனுபவம் இருத்தல் வேண்டும் (IELTS மற்றும்தகைமைகள் தேவையில்லை)
(Food Counter Attendant,Supervisor,Light duty cleaner, Farm Labourer ,Carpenter ,Transport truck driver, etc..) குறைந்த வெற்றிடங்கள் மட்டுமே உள்ளன.தகுதியுடையோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
2. Study Permit – Minor education ( வயதெல்லை 7 -17 ) Both Parents can visit with child, Student Visa For Adults IELTS குறைந்தது overall 6.00 தேவை.
3. Study + Work Permit – குறைந்தபட்சம் A/L மற்றும் 2 வருட வேலை அனுபவம் இருத்தல் வேண்டும். (Coursefee can pay after visa)
4. Visitor Visa –உற்றார், உறவினர்கள், நண்பர்கள் கனடாவில் இருந்தால் விண்ணப்பிக்கலாம் மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
Please note: Only who got an appointment can visit our office (Office Visiting Hours -9.00 am to 11.00am)
Visa Consultant- NALTC - 134- Adiyapatham Road, Thirunelvely,Jaffna. (0770385584)


# 'சத்தியத்தின் செயம்' நூல்வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 24

'சத்தியத்தின் செயம்' நூல் வெளியீட்டு விழா நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.ஸ்ரீகுமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் செயலாளர் திருமதி சாரதா உருத்திரசம்பவன் வாழ்த்துரையையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா நூலின் வெளியீட்டுரையையும், யாழ். அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் ஆசிரியர் சி.ரமேஷ் நூலின் மதிப்பீட்டுரையையும், யாழ். பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் ஆசிரியர் ந.குகபரன் பதிலுரையையும் ஆற்றவுள்ளனர். (ம-66)

# கசிப்புக் காய்ச்சிய ஐந்து பேர் கைது!



கிளிநொச்சி, ஜூலை 24

கிளிநொச்சி இராமநாதபுரம் பிரிவுக்கு உட்பட்ட கல்மடு சுடலைக்குளம் பகுதியில் கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய கசிப்புக் காய்ச்சும் இடம் முற்றுகையிடப்பட்டு மேற்படி ஐந்து பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடமிருந்து 120 லீற்றர் கசிப்பு மற்றும் ஆயிரத்து 685 லீற்றர் கோடா என்பனவற்றுடன் கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்குப் பதிவுசெய்து கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இராமநாதபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ச-113)


## வேலையாள் தேவை

எமது கால்நடை உற்பத்தி விற்பனை நிலையத்திற்கு ஆண் வேலையாள் Light Veichcle License, Auto உட்பட உள்ளவர் தேவை

JAFFNA EGG CENTRE

075 258 9665, 077 851 1265

## காணி விற்பனைக்கு

தும்பளை (பருத்தித்துறை) யில் கட்டி முடிக்கப்படாத வீட்டுடன் கூடிய இரண்டு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (CS/51360) AH-1

076 037 1963

## காணி, வீடு விற்பனைக்கு

கல்வியங்காடு விளையாட்டரங்கு வீதியில் 2 பரப்பு 17 குளி விஸ்தீரணம் உள்ள வீடும், காணியும் விற்பனைக்குண்டு.

076 1598 003
076 940 1045

## வேலையாள் தேவை

அரைக்கும் ஆலைக்கு வேலை தெரிந்த ஆள் தேவை. நேரில் வரவும்.

077 352 8986, 021 222 9352
246, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(CS/51357)AH-1

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் வசாவிளான் குட்டியபுலம் பாடசாலை அருகாமையில் 42 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- *நிலப்பரப்பு
- *குடியிருப்புக்கள் சூழவுள்ளபகுதி
- *செம்மண், நன்னீரூற்று
- *2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- *பலாலி வீதியிலிருந்து 1 km தூரம்
- *ஒரு பரப்பின் விலை ஆறு லட்சத்து ஐம்பதாயிரம் (650,000/=)
- *நிலாவரை கிணற்றிலிருந்து 2 km தூரம்

தொடர்பு:

076 057 0354
076 826 0354


# சிறுவர் சந்தை!



கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் ஆதரவில் இயங்கி வரும் குட்டிச்சுட்டி முன்பள்ளி மற்றும் அகம் குழந்தைகள் பகல்நேரக் காப்பக மாணவர்களின் வர்த்தக சந்தை நிகழ்வு கோண்டாவில் சந்தியில் அமைந்துள்ள கடைத் தொகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மேற்படி சனசமூக நிலையத் தலைவர் து.சுதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வலிகாமம் வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவலிங்கம் முரளிதரன் பிரதம விருந்தினராகவும், முல்லைத்தீவு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பாலசுப்பிரமணியம் பாலவரதன், ஓய்வுநிலை அதிபர் சண்.வாமதேவன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர். (ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.